மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரக இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள், சென்னை–5.
முன்னிலை : திரு.N.முருகேசன், M.com.,

செ.மு.ந.க.எண். 2187/நிர்–2/2020 நாள்:28.02.2020

பொருள்: பணியமைப்பு – மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம் – சென்னை – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV (2015–2016)ல் தேர்வு செய்யப்பட்டு திருச்சி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.து.ஜீனா என்பவருக்கு இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன் முறை செய்து ஆணையிடப்படுகிறது

பார்வை: 1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண்.5838/PSD-C1/2017, நாள்.06.04.2018.
2.இவ்வாணையரக இதே செ.மு.ந.க.எண்.0967/நிர்2/2018, நாள்.09.08.2018.
3. திருச்சி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரின் ந.க.எண்.4740/இநிஉ/2019, நாள்.31.10.2019.

--------

10 AUG 2018

ஆணை:

பார்வை 1ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதத்தின்படி 2015-2016 தொகுதி [IV] ல் இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் இவ்வாணையரக செயல்முறை ஆணையின்படி, பணியமர்வு செய்யப்பட்ட திருமதி.து.ஜீனா என்பவரின் கல்வித் தகுதி மற்றும் பணியமர்வு தொடர்பான பிற சான்றுகளின் உண்மை தன்மை மற்றும் உடல் தகுதிச்சான்றிதழ் சரிபார்க்கப்பட்டு உறுதி செய்யப்பட்டதின் அடிப்படையில் திருச்சி மாவட்டம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணி விதி 28(1)ன்படி, இளநிலை உதவியாளர் பணியில் 10.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

2) பத்தி 1ல் ஆணையிடப்பட்ட பணிவரன்முறையினை தொடர்ந்து திருமதி.து.ஜீனா என்பவர் பணியேற்ற நாளான 10.08.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண்பருவம் துவக்கியும் ஆணையிடப்படுகிறது.

3) மேற்படி திருமதி.து.ஜீனா என்பவர் பணியேற்ற நாளான 10.08.2018 முதல் மூன்றாண்டு கால தொடர் பணிகாலத்தில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண்பருவம் முடிக்க வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

4) தகுதிகாண் பருவ காலத்தில் மேற்படி தனியர் கீழே குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

- அலுவலக நடைமுறை நூல் (D.O.M)
- பவானிசாகர் அடிப்படை பயிற்சி

5) வரையறுக்கப்பட்ட மேற்படி தேர்வுகளை 10.08.2018 முதல் ஐந்து ஆண்டு காலத்திற்குள் தேர்ச்சி பெற தவறும் பட்சத்தில், இதே காரணத்திற்காக எவ்வித முன்னறிவிப்புமின்றி தனியர் பணியிலிருந்து நீக்கப்படுவாரென்றும் ஆணையிடப்படுகிறது.

இணை இயக்குநர்

பெறுநர்

1. திருமதி.து.ஜீனா
இளநிலை உதவியாளர்
மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,
திருச்சி மாவட்டம்.

2.மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்,
மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,
திருச்சி.

நகல்
1. இருப்புக்கோப்பு/உதிரி